**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10032026-10037

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 30.10.2025

Accepted: 03.12.2025

Published: 01.01.2026

Citation:
Sivakumar, Sk. "Medicine for 4448 Diseases - Palm Leaf Manuscript Edition and Study." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 54–60.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10037

*Corresponding Author:
cksivakumar1989@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Medicine for 4448 Diseases - Palm Leaf Manuscript Edition and Study

**C.K. Sivakumar**
*Post-Doctoral Research Scholar, Department of Tamil*
*University of Kerala, Kerala*
*http://orcid.org/0009-0000-2985-9079*

**Abstract**

*The palm leaf manuscript was used as a medium to record the thoughts and ideas of people in ancient society. A manuscript is prepared by processing palm leaves and writing on them with a stylus. Among the manuscripts written in this manner, those containing medical notes have been found in the greatest numbers. Generally, medical manuscripts describe various diseases and their corresponding methods of treatment. The medical notes conveyed in this manner tend to be expressed in an indirect and suggestive manner. This is presumably because the knowledge of these medical practices was intended to be passed down only to one's own descendants, and therefore the meaning was conveyed in an implicit and coded way. Due to this situation, there is a need in the present day to properly understand medical manuscripts, edit them, and publish them. In today's context, manuscripts have been neglected due to the overwhelming influence of the printing press. This paper aims to subject the literary treasures and medical notes buried within palm leaf manuscripts to scholarly study and analysis.*

***Keywords:*** *Siddha Medicine, Palm Leaf Manuscript, Diseases, Edition*

**References**

1. Mr. Adigalaasiriyan - 2005, Thirumanthiram Eighth Thanthiram: Text and Commentary, Subam Printers, First Edition.
2. Poovai Amuthan - 2017, Thirukkural, Kavitha Publications, Second Edition.
3. M. Ramalingam Bakirathan - 1994, Tolkappiyam Ezhutthu Padalam - Sol Padal, Ramalingan Panimandra Publications, First Edition.
4. Dr. Ki. Raja - 2015, Tolkappiya Porulathikaram (Part – 2), Third Edition – June.
5. Puliyur Kesigan - 2006, Natrinai First Part, Pari Nilayam - Chennai, Reprint.
6. Seethalai Sathanar - 1994, Manimekalai, Saiva Siddhanta Book Publishing Society, Third Edition – December.

# 4448 நோய்களுக்கு மருந்து – ஓலைச்சுவடி பதிப்பும் ஆய்வும்

*ச.கு. சிவக்குமார்*
முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த் துறை, கேரளப் பல்கலைக்கழகம்

***ஆய்வுச் சுருக்கம்***

*பண்டைய சமூக மக்களின் கருத்துக்களைச் சிந்தனைகளைப் பதிவு செய்யும் ஓர் ஊடகமாகச் சுவடி பயன்படுத்தப்பட்டது. சுவடி என்பது பனையோலையைப் பதப்படுத்தி எழுத்தாணி கொண்டு எழுதப்படுவது. அவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளில் மருத்துவக் குறிப்புகள் கொண்ட சுவடிகளே அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளன. பொதுவாக மருத்துவச் சுவடிகள் பல நோய்களையும் அதற்குறிய மருத்துவப் பயன்பாட்டு முறைகளையும் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு எடுத்துரைக்கும் மருத்துவக் குறிப்புகள், குறிப்பால் உணரக் கூடியதாக உள்ளன. காரணம் தன் வழித் தோன்றலுக்கு மட்டுமே இம்மருத்துவப் பயன்பாட்டு முறை கைவரப்பெற வேண்டும் என்ற மனப்பான்மையில் அதன் பொருள் தன்மைக் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது என ஊகிக்க இடமுண்டு. இத்தகைய நிலைபாட்டின் காரணமாகச் சமகாலத்தில் மருத்துவச் சுவடிகளைச் சரியான முறையில் புரிந்து கொண்டு அதனைப் பதிப்பித்து வெளியிட வேண்டிய தேவையுள்ளது. இன்றைய சூழ்நிலையில் அச்சு இயந்திரத்தின் செல்வாக்கு மிகுந்தமையால் சுவடிகள் புறகணிப்புக்கு உள்ளாயின. ஏட்டில் புதைந்துள்ள இலக்கியச் செல்வங்கள் மருத்துவ குறிப்புகள் ஆகியவற்றை ஆய்விற்கு உட்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.*

***கலைச்சொற்கள்:*** *சித்த மருத்துவம், ஓலைச்சுவடி, நோய்கள், பதிப்பு*

## ஆய்வு முன்னுரை

பண்டைய கால மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து வந்தனர். அவர்களின் வாழ்வியல் சூழலில் விலங்குகளின் தாக்குதலினாலோ அல்லது இயற்கையின் சீற்றங்களினாலோ உடல் நலத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். இத்தருணத்தில்தான் மனிதன் மருத்துவத்தின் தேவையை உணரத் தொடங்கினான். இந்நிலையில் இயற்கையில் கிடைத்த இலைகளைக் கொண்டு மருத்துவம் செய்ய முற்பட்டான். இதனை விலங்குகளிடம் இருந்து உற்றுநோக்கி கற்றுக்கொண்டான் எனலாம். ஏனெனில் கீரியும், பாம்பும் சண்டையிடும் பொழுது இறுதியில் பாம்பைக் கீரி கொன்று விடுகிறது. பின்னர் ஏதோ ஒரு மூலிகைச் செடியின் மீது படுத்து புரண்டு பாம்பின் விஷத் தாக்குதலில் இருந்து தன்னைக் காத்துக் கொள்வதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவை விலங்குகளுக்குக் கிடைத்த இயற்கை சார்ந்த கூறுகள் ஆகும். மனிதனும் இது போன்ற செயல்பாடுகளில் இருந்து பின்னர் மூலிகை மருந்தினைக் கண்டுபிடித்தான். இவ்வகையில் மருத்துவம் தோற்றம் பெற்றது எனலாம். நாளடைவில் மனித சமுகத்தில் நோய்களும் அதிகரித்தன. எனவே மருத்துவத்தின் பயன்பாடும் அதிகரித்தது. இதன் விளைவாக மருத்து வர்கள் தோற்றம் பெற்றனர். மருத்துவத்தின் வளர்ச்சியும் பரவலாக்கம் அடைந்தது எனலாம். அவ்வகையில் 4448 நோய்களுக்கு மருந்து - என்னும் சுவடியை அறிமுகம் செய்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**மருத்துவம்**

தமிழ் மருத்துவ மரபு என்பது ஆசிரிய மாணவ பரம்பரையின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றது. இன்று அறியப்படுகின்ற போகர், கோரக்கர், அகத்தியர், திருமூலர், இராமதேவர், இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, மச்சமுனி, கொங்கநாதர், பதஞ்சலி, நந்நிதேவர், போககுரு, பாம்பாட்டிச் சித்தர், சட்டைமுனி, சுந்தரானந்த தேவர்,குதம்பைச் சித்தர் என்ற பதினெட்டு சித்தர்கள் இருந்ததாகக் கூறுப்படுகிறது. சித்தர்கள் யோக, தியான நெறியில் நிலைத்து நிற்க மருத்துவத்திற்கு முதலிடம் அளித்தனர். தான் தேடி உருவாக்கிய மருத்துவ பயன்களைத் தன் சீடர் பரம்பரைக்கு வாய்மொழியாகப் கற்பித்தனர். நீண்டகால பரிமாற்றத்திற்குப் பின்பே ஓலைச் சுவடியில் அரங்கேறியது. இதனைத் தமிழ் இலக்கிய வரலாறுகள், கி.பி.16-ஆம் நூற்றாண்டையே அதிகப்படியாக எடுத்துக்காட்டுகின்றன. இவை ஓலைச் சுவடியில்பதிவுபட்டகாலமாகஇருக்கலாம். தமிழ் இலக்கண, இலக்கிய சான்றாதாரங்களின் அடிப்படையில்மருத்துவம்பெரும்பாலான மக்களுடன் இணைந்திருந்தது. ஒரு கால கட்டத்தில்இவைஅவைதீகமதவாதிகளான சமண பௌத்தர்களின் உள்ளீடால் பல மருத்துவ முறைகள் உருவாயின.

உலகின் முதல் வைத்தியர் என்ற பெருமையுடையவர் ஆத்ரேயர். கிரேக்க மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஹிப்போகிராட்ஸ், போன்ற புகழ்மிக்க மருத்துவர்கள் வாழ்ந்திருந்தனர். அதுபோலவே நம்நாட்டில் சித்தர்கள் மருத்துவத்தில் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு நமது பண்டைய இலக்கியங்கள் சான்று பகருகின்றன.

**“தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பவர்களை**
**பிள்ளை வினையை பிடித்து பிசைவர்கள்” (1) (திருமந்திரம் பா. 2611)**

மேலும் தன்வந்திரி, சரகர், சுச்சருதர் போன்றவர்கள் நம்நாட்டில் சிறந்து விளங்கிய மருத்துவ மேதைகள்.

**சித்த மருத்துவம்**

நோய்களை நன்கு ஆராய்ந்து அந்நோய்களின் குறிக்குணங்கள், அவற்றின் வன்மை, மென்மைகளைத் தெளிவாக உணர்த்தி அவற்றைத் தீர்க்கும் வழி வகைகளைக் கூறுவதேசித்தமருத்துவம்.இதுதமிழகத்தின் தொன்மையான மருத்துவமுறை, சித்தர்களால் போற்றி வளர்க்கப்பெற்ற மருத்துவம் என்ற அடிப்படையில் இப்பெயர் பெற்றுள்ளது. நோயை வேரோடு நீக்க வழிகாணச் சித்தர்களால் கையாண்ட முறையே சித்த மூலிகை வைத்தியமுறையாகும் இதனையே திருவள்ளுவர்.

**நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்**
**வாய் நாடி வாய்ப்பச் செயல்(2)**
**(திருக்குறள் : 948)**

என்னும் குறள் மூலம் விளக்குகிறார்.

உயிர்களை இயல்பான முறையில் செயல்பட விடாமல் தடுக்கும் சக்தியே நோய். தொல்காப்பியர் நோயை இருவகையாக வகைப்படுத்துகிறார். அவை மனவருத்தம் தருகின்ற நோய் (பையுள்) என்றும், உடல் வருத்தம் தருகின்ற பிணி (சிறுமை) என்றும் வரையறை வகுக்கிறார்.

**“பையுளும் சிறுமையும் நோயின் பொருள”(3)**
**(தொல்.சொல். உரி.7)**

மேலும் தொல்காப்பியத்துள் வேம்பும் கடுக்காயும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டதைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**“வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்” (4)**
**(தொல். பொ. செய்.112)**

எனவரும் செய்யுளுக்கு முற்பருவத்துக் கைத்துப் பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்பும் கடுவும் போல வெய்யவாய

சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்குமெனக் கருதிப் பாதுகாத்து" எனப் பேராசிரியர் நச்சினார்க்கினியரும் உரை வகுத்துள்ளார்.

உலகில் நடைமுறையிலுள்ள மருத்துவ முறைகளை ஐந்தாக வகைப்படுத்துவர்

1. ஹோமியோபதி
2. அலோபதி
3. யுனானி
4. ஆயுர்வேதம்
5. சித்த மருத்துவம்

## நோய் தோன்றுவதற்கான காரணங்கள்

1. சுற்றுப்புறச் சூழல்களால்
2. உணவு முறைகள்
3. போதைப்பொருட்கள்
4. விலங்குகள் மற்றும் பிற உயிரினங்களின் (நுண்ணுயிரிகள்) தாக்குதல்

என்ற தன்மைகளின் அடிப்படையில் நோய் தோன்றுவதைக் காணலாம்.

## சித்த மருத்துவ நோய்கள்

சித்த மருத்துவத்தில் நோய்களின் தொகை 4448 என வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4000 நோய்கள் மனிதர்களுக்குத் தோன்றுவன. ஏனைய 448 நோய்கள் மற்ற உயிர்களுக்குத் தோன்றுவன ஆகும். இச்சுவடி கேரள பல்கலைக்கழக கீழ்த்திசை சுவடி நூலகத்தில் 12860 (228 ஓலைகள்) மற்றும் 12861 (180 ஓலைகள்) என்ற எண் வரிசையில் மொத்தமாக 408 ஓலைகள் பாதுகாக்கப்படுகின்றன. இதுவரையிலும் 4448 நோய்களுக்கு மருந்து என்ற ஓலைச் சுவடி முழுமையாக பதிப்பிக்கப்பட்டதன் தகவல்களோகிடைக்கக்கூடியதகவல்களோ எங்குமே குறிப்பிடப்படவில்லை. ஆகையால் இச்சுவடி முழுமையாக பதிப்பித்து வெளிவரும்தருணத்தில்சித்தமருத்துவத்தில் புதிய ஒரு மாற்றத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

## மருந்து

நோயாளியின் துன்பத்தையும் வேதனையையும் துடைப்பது மருந்து என்று நற்றிணை கூறுகிறது.

**அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து (5)**
**(நற்றிணை. 140)**

என்ற அடியின் மூலம் உனரலாம்.

## பெண் மருத்துவம்

போர்களத்திற்குச் சென்று போரினால் ஏற்பட்ட விழுப்புண் கொண்டு புண்ணின் கடுப்புடன் மனை திரும்பும் வீரனுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவராக மனைப்பெண்டிர் இருந்திருக்கின்றனர். மருத்துவம் பார்க்கும் ஆண் பாலரை மருத்துவர் என்றும், பெண்பாலரை 'மருத்துவி' என்றும் அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது.

**"ஆருயிர் மருத்துவி"(6)**
**(மணி : 17:15 காதை)**

என்று மணிமேகலையில் சாத்தனார் குறிப்பிடுவதிலிருந்து ஆண், பெண் இரு பாலரும் மருத்துவக் கல்வியுடையவராக இருந்தனர் என்பது புலப்படுகிறது.

## ஓலைச்சுவடி

பழங்காலத்தில் மக்கள் எழுதுவதற்குப் பெரும்பாலும் ஓலையையே பயன்படுத்தினர். ஓலை ஏடுகளில் எண்ணங்கள் பதிக்கப் பெற்றதால் ஏட்டுச்சுவடி என்று பெயர் பெற்றது. ஓலைகள் ஐநூறு ஆண்டுகள் வரை அழியாத்தன்மை வாய்ந்தது. அதிக செலவு இல்லாதது. தமிழகத்தில் கிராமப்புறங்கள் முதல் அனைத்து இடங்களிலும் மிகுதியாகவும், எளிமையாகவும் கிடைக்கக்கூடியது. பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லவும் வசதியாக உள்ளது.

எழுத்துக்கள் பதியுமாறு எழுதப்பெற்ற ஏடுகளின் தொகுப்பு சுவடி ஆகும். சுவடிகளை உருவாக்குவதற்கு எழுதப்படு பொருள், எழுதுபொருள், எழுது கருவி என்ற மூன்றும் தேவைப்படுகின்றன.

எகிப்தியர் "பேப்பரஸ்" என்ற புல்லில் கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியுள்ளனர். சுவடி அல்லது புத்தகம் என்ற பொருளில் பேப்பரஸ் சுருளைக் கிரேக்கர் "பிப்பியன்" என்றும் உரோமர் பிப்னி என்றும் வழங்கியுள்ளனர். இதுவே கிறித்துவ வேத நூலாகிய விவிலிய நூலுக்கும் பெயராயிற்று. பேப்ரஸ் என்பதிலிருந்து உருவாகிய சொல் பேப்பர் என்பது அறிஞர்கள் கருத்து.

எழுதப்படு பொருளாக களிமன், கல், தோல், உலோகத்தகடு, இலை, மரப்பலகை, பூர்ஜப்பட்டை, துணி, மூங்கில், செப்பேடு, வெள்ளித்தகடு, ஓலை, தாழைமடல் போன்றவை எழுதப்படுகின்ற பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

எழுது பொருட்களில் நிறங்களுக்காக விளக்கு கறி, இலைச்சாறு, பூச்சாறு மிருகங்களின் குருதி போன்ற பொருட்களையும் நிறம் கொடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. எழுது கருவிகளாக ஆணி, கூரியகல், தண்டு, நாணல், பறவை இறகு, பன்றிமுள், விலங்குகளின் எலும்பு, மெல்லிய தூரிகை போன்ற பல பொருள்களை மக்கள் எழுது கருவிகளாகப் பயன்படுத்தி உள்ளனர்.

## மருத்துவச் சுவடிகள்

இன்று தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள சுவடிகளில் பெரும்பாலானவை மருத்துவச் சுவடிகளாகும். அம்மருத்துவச் சுவடிகளில் பதிவு செய்துள்ள மருத்துவ முறையானது தமிழரின் பாரம்பரிய மருத்துவ முறையாகும்.

சென்னை அரசினர் சுவடி நூலகத்தில் 72,314 சுவடிகள் உள்ளன. அவற்றில் 16558 சுவடிகள் தமிழ்ச் சுவடிகள் இவற்றுள் 1762 சித்த மருத்துவச்சுவடிகள், ஆசியவியல் நிறுவனத்தில் 1753 சுவடிகள் காணப் படுகின்றன. அவற்றில் 715 மருத்துவச் சுவடிகள் ஆகும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 592 சுவடிகள் உள்ளன. அவற்றில் 270 சுவடிகள் மருத்துவச் சுவடிகள் ஆகும். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையில் சுமார் 3000 சுவடிகள் காணப்படுகின்றன. அவற்றில் 486 சுவடிகள் மருத்துவச் சுவடிகள் ஆகும். சரசுவதி மகால் நூலகத்தில் 2050 சுவடிகள் உள்ளன. அவற்றில் 1674 சுவடிகள் மருத்துவச் சுவடிகள் ஆகும். தமிழ்நாடு சித்தமருத்துவ வாரியத்தில் 861 சுவடிகள் காணப்படுகின்றன. மைய, சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் ஏறத்தாழ 2000 சுவடிகள் உள்ளன. கணக்கில் வராத ஆயிரக்கணக்கான மருத்துவச் சுவடிகள் மற்றும் ஏணைய சுவடிகள் இன்றும் கண்டறியப்பட்டு வருகின்றன.

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் ஆசியாவிலுள்ள சுவடி நூலகங்களில் இரண்டாவது பெரிய சுவடித்தொகுப்பு நூலகமாகும். சுமார் 65,000-க்கும் மேற்பட்ட சுவடிகள் உள்ளன. எண்ணிக்கையில் சமஸ்கிருத, மலையாளச் சுவடிகள் முதலிடம் வகிக்கின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, உருது இந்தோனேஷியன் போன்ற மொழி எழுத்துகளும். தேவநாகிரி, கோலெழுத்து. வட்டெழுத்து. கிரந்தம், ஆங்கிலம் முதலிய எழுத்துக்களோடும் ஏடுகள் காணப்படுகின்றன. எண்ணிக்கையில் தமிழ்ச்சுவடிகள் ஏறத்தாழ 800 க்கும் மேற்பட்ட அளவில் காணப்படுகின்றன.

## சுவடி ஆசிரியர்

சுவடியில் ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பெரும்பாலான பாடல்களின் இறுதியில் அகஸ்தியர் கூறி எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அகத்தியரின் வேறு பெயர்கள்

சுவடியில் ஒரு சில பாடல்களின் இறுதியில் இவ்வாறு செய்தால் நோய் தீரும்

என்று அகத்தியர் கூறி எழுதியது போன்று குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. வியாசமுனி | 7. பதமா முனிவர் |
| 2. மாமுனிவன் | 8. துய்ய முனிவர் |
| 3. அகத்தியனார் | 9. தயங்கு முனிவர் |
| 4. அண்டப் புகழுமா முனிவன் | 10. தெய்வ முனிவர் |
| 5. குறு முனி | 11. வாழும் முனிவன் |
| 6. ஏக்க முனிவன் | 12. தேவ முனி |

## ஆசிரியர் செய்திகளை வெளிப்படுத்தும் திறன்

ஆசிரியர் பாடல்களில் நோயிற்கான மருந்துப் பெயர்களைக் கூறி அம்மருத்துவ முறையில் அந்த நோய்க்கு என்னென்ன மருந்துப் பொருட்கள் எந்த அளவில் சேர்க்க வேண்டும் என்பதனையும் எடுக்க வேண்டிய அளவு, மருந்துப் பொருட்கள் சேர்க்கும் முறை, மருந்து சாப்பிடும் அளவு, மருந்தினைப் பாதுகாக்கும் முறை என்ற நிலையில் மருத்துவக் குறிப்புகளைப் பாடியுள்ளார். ஒரு சில பாடல்களில் இம்மருந்து சாப்பிடும் பொழுது உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் குறிப்பிட்டுள்ளார். சுவடியில் எழுத்து, சொல் விடுகை, சொல் மிகுதி, கவனக் குறைவு காரணமாகச் சீர்கள் குறைந்தும், கூடியும் காணப்படுகின்றன. சில இடங்களில் வார்த்தைகள் பொருள் தராமல் பயின்றும் வந்துள்ளன.

இவ்வாறு பாடல்களின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

## படைப்பின் நோக்கம்

நம்முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்ற மருத்துவக் குறிப்புகளை இலக்கியமாக்குதல் என்பது படைப்பின் முதல் நோக்கமாகும். இலக்கியம் என்பது கேட்போரை எளிதில் கவரும் தன்மை கொண்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு மருத்துவக் குறிப்புகளைக் பாடல்களாக அமைத்துள்ளனர் நம் முன்னோர்கள். இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைச் வெளியிடுதல் என்பது தமிழ் இலக்கிய வளமைக்குச் சிறப்பு சேர்க்கும்.

## சுவடியின் காலம்

ஜய வருடம் ஐப்பசி மாதம் 24-ஆம் தேதி என்று சுவடியின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தேதியை வைத்துக் கணக்கிட்டுப் பார்க்கும் பொழுது ஆங்கில வருடத்திற்கு 1923 நவம்பர் என்ற கால கட்டத்தில் எழுதப்பட்ட சுவடியாக இருக்கலாம் என நம்மால் உணரமுடிகிறது.

## பதிப்பில் செய்ய வேண்டிய மாற்றங்கள்

1. சுவடிகளில் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி இடுவதில்லை. மெய் எழுத்துக்களுக்குப் புள்ளியிட்டு பதிப்பிக்க வேண்டும் .
2. குறில், நெடில் வேறுபாடுகள் கண்டறிந்து பதிப்பிக்க வேண்டும்.
3. தேவையற்ற ஒற்றுகள் நீக்கியும் தேவையான இடங்களில் ஒற்றுகள் சேர்க்கவும் வேண்டும்.
4. பாடலின் அடிகளும், சீர்களும் பிரித்து பதிப்பிக்க வேண்டும்.
5. சுவடிகளில் காணப்படும் மூலிகைச் செடிகள், நோய்களின் பெயர்கள், அளவு முறைகள் போன்றவற்றை பட்டியலிடுதல்.

## தொகுப்புரை

மருத்துவம், சித்த மருத்துவம், உலகில் நடைமுறையிலுள்ள மருத்துவ முறைகள், நோய் தோன்றுவதற்கான காரணங்கள், சித்த மருத்துவ நோய்கள், மருந்து, பெண் மருத்துவம், ஓலைச்சுவடி, மருத்துவச் சுவடிகள், சுவடி ஆசிரியர், அகத்தியரின் வேறு பெயர்கள், ஆசிரியர் செய்திகளை வெளிப்படுத்தும் திறன், படைப்பின் நோக்கம், சுவடியின் காலம், பதிப்பில்

செய்ய வேண்டிய மாற்றங்கள் போன்றவை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

## முடிவுரை

பதிப்பு என்பது ஒரு கலை. மற்றும் அறிவியல் கல்விப் பரிமாற்றம். பதிப்பானது காலந்தோறும் பல்வேறு மாற்றங்களை உட்படுத்திப் புதிய புதிய முயற்சிகளை மேற்கொண்டு நம்முடைய பண்டைய அறிவுகளை முழுமையாக வெளிப்படுத்துவதாக உள்ளது.

தமிழ்ச் சுவடிகள் உலகின் பல இடங்களிலும் பரவிக்கிடக்கின்றன. நாடு, இனம், மொழி, சமயம் என்ற வேறுபாடுகளைக் கடந்த நிலையில் தமிழ்ச்சுவடிகள் பல இடங்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் இலக்கணம், இலக்கியம், பல கலைச்செய்திகள் இடம் பெற்றிருப்பினும், எண்ணிலடங்கா ஏட்டுச் சுவடிகள் தமிழ் மருத்துவம்பற்றிவிளக்கிநிற்பதுஅனைவரும் அறியத்தக்கதாகும். தமிழ் மருத்துவத்தின் தொன்மை, வளர்ச்சி, சிறப்பு ஆகியவற்றை அறிவதற்கும் பலருக்கும் தெளிவுறுத்து வதற்கும் இம்மருத்துவச் சுவடிகள் பெருந்துணையாகும். ஆயினும் இப்பொழுது கிடைக்கும் மருத்துவ ஏடுகளில் ஒரு சில மட்டுமே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. பல இன்னும் பதிப்பிக்கப் பெறாமல் ஓலைச் சுவடி வடிவிலேயே உள்ளன. இத்தகைய பதிப்புகள் பல வெளிவரும் பொழுது தமிழ் மருத்துவத்தின் சிறப்பு நன்கு புலனாகும்.

## அடிக்குறிப்புகள்

1. திரு. அடிகளாசிரியன் - 2005, திருமந்திரம் எட்டாம் தந்திரம் மூலமும் உறையும், சுபம் பிரிண்டர்ஸ், முதல் பதிப்பு.
2. பூவை அமுதன் - 2017, திருக்குறள், கவிதா வெளியீடு, இரண்டாம் பதிப்பு.
3. மு. இராமலிங்கம் பகீரதன் - 1994, தொல்காப்பியம் எழுத்துப் படலம் - சொல் பாடல், இராமலிங்கர் பணிமன்ற வெளியீடு, முதல் பதிப்பு.
4. முனைவர் கி. இராசா - 2015, தொல்காப்பிய பொருளதிகாரம் (பகுதி - 2), மூன்றாம் பதிப்பு - ஜூன்.
5. புலியூர் கேசிகன் -2006, நற்றினை முதற் பகுதி, பாரி நிலையம்-சென்னை, மறு பதிப்பு.
6. சீத்தலை சாத்தானார் - 1994, மணிமேகலை, சைவசித்தாந்த நூற்பாதிப்புக் கழகம், மூன்றாம் பதிப்பு - டிசம்பர்.